விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற பிரமாண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் சத்யநாராயணன், முகமதுரபி, சந்திரசேகரன், கோபி மற்றும் குன்னலூர் அன்பழகன், ஜானகிராமன், கண்ணன், வெங்கடேசன், விஜயபாலன், ஜீவா உள்ளிட்ட கழக விவசாய அணி,விவசாய தொழிலாளர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்றனர்.

வேலூர் மாவட்டத்தில் பெரும்பாலானோருக்கு வாழ்வாதாரமாக விளங்கும்

தோல் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில்- டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, ஜூலை 26- வேலூர் மாவட்டம் தோல் தொழில், தொழிற்சாலை உபகரணங்கள், மற்றும் அதனுடன் சார்ந்த உற்பத்தி தொழில்களின் (MSME) முக்கிய மையமாக விளங்கி வருகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக இருக்கும் இந்தத் தொழில்கள் மேலும் வளர்ச்சி பெறவும், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகவும், தொழில்களுக்கு தேவையான நவீன உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப வசதிகள், சந்தை வாய்ப்புகள் மற்றும் ஒன்றிய அரசின் ஆதரவுத் திட்டங்கள் முழுமையாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் MSME தொழில் குழுமங்களின் தற்போதைய நிலை, அவற்றின் வளர்ச்சி வாய்ப்புகள், தொழில்கள் எதிர்கொள்ளும் சவால்கள், உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகள், தொழில் நுட்ப மேம்பாடு, வங்கிக் கடன் வசதி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சந்தை வாய்ப்புகள் மற்றும் மத்திய அரசு செயல்படுத்தியுள்ள திட்டங்களின் பயன்கள் குறித்து விரிவான விளக்கம் அளிக்கவும்?

இதற்கு பதிலளித்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை இணை அமைச்சர் திருமதி.ஷோபா கரந்த்லாஜே எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :

குறு மற்றும் சிறு தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம் Micro and Small Enterprises - Cluster Development Programme (MSECDP) திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்திற்கு தொழில் குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம் (Common Facility Centre) அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 4 உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநில அரசுகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொழில்கள் எதிர்கொள்ளும் சவால்கள், உள்கட்டமைப்புத் தேவைகள், தொழில்நுட்ப மேம்பாடு, உற்பத்தித் திறன் உயர்வு, தர மேம்பாடு மற்றும் பொதுவசதிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே மத்திய அரசின் ஒப்புதல் வழங்கப்படுவதாகவும் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய உற்பத்தித்திறன் கவுன்சில் (NPC) மேற்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில், MSECDP திட்டம் தொழில்களின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், தரத்தை மேம்படுத்தவும், சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் புதிய நகரங்கள் 'ஸ்மார்ட் சிட்டீஸ்' திட்டத்தில் சேர்க்கப்படுமா?

மக்களவையில் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 26- தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாட்டில் புதிய நகரங்களை ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டத்தில் (Smart Cities Mission) சேர்ப்பது, திட்டத்தின் செயல்திறன், பயன்படுத்தப்படாத நிதி மற்றும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களின் (ICCC) எதிர்கால செயல்பாடு குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, தமிழ்நாட்டில் புதிய நகரங்களை ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டத்தில் சேர்க்க ஒன்றிய அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா? இல்லையெனில் அதற்கான காரணம் என்ன?

ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டத்தின் செயல்படுத்தும் திறன் மற்றும் பயன்படுத்தப்படாத நிதி தொடர்பாக மாநிலம் மற்றும் நகர வாரியாக அரசு மதிப்பீட்டு அறிக்கை தயாரித்துள்ளதா?

மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஸ்மார்ட் நகரங்களிலும் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தங்கள், நீண்டகால பராமரிப்பு, நிலையான செயல்பாட்டு நிதி மற்றும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களை (ICCC) உள்ளாட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் மனோகர் லால் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில்:

2025 மார்ச் 31ஆம் தேதியுடன் ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் நிறைவடைந்துள்ளதால், அதன் கீழ் புதிய நகரங்களை சேர்க்கும் எந்த ஏற்பாடும் தற்போது இல்லை.

2026 மார்ச் 31 நில வரப்படி, ரூ.48,000 கோடி மொத்த மத்திய நிதி ஒதுக்கீட்டில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ரூ.47,458 கோடி (99%) கோரியுள்ளன. இதில் ரூ.46,377 கோடி (98%) பயன்படுத்தப்பட்டுள்ளது. மாநிலம் மற்றும் நகர வாரியாக நிதி கோரிக்கை மற்றும் பயன்படுத்தப்பட்ட விவரங்கள் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன.

நீதி ஆயோக் 2025 செப்டம்பரில் வெளியிட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் தேசிய நகர்ப்புற வளர்ச்சி இலக்குகளுடனும், ஐக்கிய நாடுகள் சபையின் நிலைத்த வளர்ச்சி இலக்குகளுடனும் (SDGs) நன்கு ஒத்துப்போகிறது. மொத்தம் 8,063 திட்டங்களில் 93 சதவீத திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (ICCC) 100 சதவீதம் அமைக்கப்பட்டுள்ளதால், நகரங்களின் வாழ்வாதாரத் தரம், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் சிட்டிஸ் திட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, 2025 ஜூன் 10ஆம் தேதி மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச சங்களுக்கு ஆலோசனை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சிறப்பு நோக்க நிறுவனங்கள் (SPVs) 2026 மார்ச் மாதத்திற்குள் மத்திய அரசு வழங்கிய நிதிக்கான பயன்பாட்டு சான்றிதழ்களை (UC) சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நடைபெற்று வரும் அனைத்து திட்டங்களையும் விரைந்து முடித்து, உருவாக்கப்பட்ட சொத்துகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (ICCC) நகரங்களின் செயல்பாட்டு மையங்களாகவும், மாநில அளவிலான பகுப்பாய்வு மையங்களாகவும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும், அவற்றின் நிர்வாகக் கட்டுப்பாடு நகர்ப்புற வளர்ச்சித் துறைகளிடம் இருக்க வேண்டும் என்றும் ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நகர்ப்புற வளர்ச்சியின் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப SPVகளின் பங்கை மறுவடிவமைக்க மாநிலங்கள் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விவரங்களின்படி, தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய 11 ஸ்மார்ட் நகரங்களுக்கு தலா ரூ.490 கோடி வரை மத்திய நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான நகரங்கள் அந்த நிதியை முழுமையாக அல்லது கிட்டத்தட்ட முழுமையாக பயன்படுத்தியுள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் உத்தரவாதத் திட்டம்;

குறு-சிறு தொழில் நிறுவனங்களுக்கு பிணையமில்லாக் கடன் பெற உதவியுள்ளதா?

மக்களவையில் - சி.என். அண்ணாதுரை கேள்வி !

புதுடெல்லி, ஜூலை 26- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) அமைச்சரிடம் பின்வருவன குறித்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:

கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE) மூலம் செயல்படுத்தப்படும் கடன் உத்தரவாதத் திட்டம் (CGS), குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு (MSEs) பிணையமில்லா (Collateralfree) கடன் பெறுவதற்கு உதவியுள்ளதா? அவ்வாறு இருந்தால் அதன் விவரங்கள் என்ன?

2022 முதல் இதுவரை, தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் கடன் உத்தரவாதம் பெற்றுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு? மேலும், அனுமதிக்கப்பட்ட கடன் தொகை மாவட்ட வாரியாகவும், துறை வாரியாகவும் எவ்வளவு?

முதல் தலைமுறை தொழில் முனைவோர், பெண்கள் தலைமையிலான தொழில் நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள தொழில் அலகுகள் இந்தத் திட்டத்தின் பலன்களை போதுமான அளவில் பெற முடிந்துள்ளனவா? அவ்வாறு இருந்தால், அது குறித்த அரசின் மதிப்பீடு என்ன?

தமிழ்நாட்டில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பிணையமில்லா கடன்களை வழங்குவதில் தாமதம், அதிக செயலாக்கக் கட்டணங்கள் அல்லது வங்கிகளின் தயக்கம் தொடர்பாக ஏதேனும் புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா? அவ்வாறு இருந்தால், அவற்றின் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கலை மேம்படுத்தவும், CGTMSE திட்டம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் அரசு மேற்கொண்டுள்ள திருத்த மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி

நாகை, தஞ்சையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

நாகை, ஜூலை 26 தேசிய அளவிலான நுழைவு தேர்வுகள், பள்ளி பொதுத்தேர்வுகளில் ஏற்பட்ட பல்வேறு குளறுபடிகளை தொடர்ந்து ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக கோரி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மற்றும் இளைஞர்கள் டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வருகின்றனர். 3 நாட்களுக்கு முன் நாடாளுமன்றம் நோக்கி பேரணி, போராட்டம் மேற்கொண்டனர்.

அப்போது டெல்லி போலீசார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகைகுண்டு வீசியும் மாணவர்களை விரட்டி அடித்தனர். இதில் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இந்த சம்பவத்தை கண்டித்து நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் இன்றும் பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நாகை செல்லூரில் உள்ள அரசு கல்லூரி முன் இந்திய மாணவர் சங்கம் சார்பில் இன்று காத்திருப்பு போராட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் முகேஷ் கண்ணா தலைமை வகித்தார். இந்த போராட்டத்தில் வகுப்பு களை புறக்கணித்து திரளான மாணவர்கள் பங்கேற்றனர்.

அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவுகளை பறிக்கின்ற நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தஞ்சை தலைமை தபால் நிலையம் முன் இட துசாரிகள் பொது மேடை சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. உலகத் தமிழர் பேரமைப்பு துணைத்தலைவர் அய்யனாபுரம் முருகேசன் தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் முன்னிலை வகித் தார்.

ஆர்ப்பாட்டத்தை மக்கள் அதிகார மூத்த தலைவர் காளியப்பன் துவக்கி வைத்தார். தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்க பொது செயலாளர் தங்க.குமரவேல் கண்டன உரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சேவையா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநகர செயலாளர் வடிவேலன், விசிக மாவட்ட துணை செயலாளர் தமிழ் முதல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வாலிபர் சங்க நிர்வாகி கன்னத்தில் அறைந்த டிஎஸ்பி

புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகே இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (டிஒய்எப்ஐ), இந்திய மாணவர் சங்கம் மற்றும் ஏஐஒய்எப் சார்பில் நேற்று காத்திருப்பு போராட்டம் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர் களை குண்டு கட்டாக தூக்கி கைது செய்ததுடன் தனியார் மண்டபத்தில் அடைத்தனர். அப்போது போலீசார், மாணவர்களிடம் செல்போன்களை பறித்தும், ஆதார் அட்டைகளை கேட்டும் மீண்டும் கடுமையான முறையில் நடந்து கொண்டனர். இதை தட்டி கேட்ட வாலிபர் சங்க மாவட்ட தலைவர் ஜனார்த்தனன் கன்னத்தில் டிஎஸ்பி பிருந்தா அறைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

வீராணம் ஏரியில் இருந்து சென்னைக்கு

குடிநீர் அனுப்புவதில் சிக்கல்!

கடலூர், ஜூலை 26 வெகுவாக குறைந்து வரும் நீர்மட்டம் காரணமாக வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குடிநீர் அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவிலில் உள்ள வீராணம் ஏரி 39 சதுர கி.மீ பரப்பும், 1,465 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டது. வீராணம் ஏரியின் தண்ணீர் காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் பகுதி டெல்டா பாசனத்திற்கும், சென்னை குடிநீருக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஏரியில் இருந்து சராசரியாக 73 கன அடி தண்ணீர் தினமும் சென்னை குடிநீருக்கு அனுப்பப்படுகிறது. ஜனவரி மாதம் டெல்டா பாசனத்திற்கு முற்றிலும் நிறுத்தப்பட்ட நிலையில், சென்னை குடிநீருக்காக வீராணம் ஏரியில் முழு கொள்ளளவு நிரப்பப்பட்டது.

மே, ஜூன், ஜூலை மாதங்களில் வீராணம் ஏரியின் நீர்மட்டம் சரிந்து வருவதால், அவ்வப்போது சென்னை குடிநீர் தேவைக்காக மேட்டூரில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு கீழணையில் இருந்து வடவாறு மூலம் வீராணம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த 8ம் தேதி சென்னை குடிநீருக்காக கீழணையில் இருந்து வீராணம் ஏரிக்கு வடவாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டு, 10 நாட்களாக ஏரிக்கு நீர்வரத்து இருந்தது. ஆனாலும் கடந்த 20ம் தேதி நிலவரப்படி வீராணம் ஏரியின் நீர்மட்டம் 43.1 அடியாகவும், 530 மில்லியன் கன அடி தண்ணீரும் இருந்த நிலையில், நேற்று 42.01 அடியாகவும், 490 மில்லியன் கன அடியாகவும் குறைந்துள்ளது.

சென்னையில் குடிநீர் பற்றாக்குறை!

சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம், புழல், பூண்டி, சோழவரம், கண்ணன்கோட்டை, வீராணம் ஆகிய ஏரிகளிலும் போதிய நீர் இருப்பு இல்லாததால் அதிகாரிகள் கவலையில் உள்ளனர். வீராணம் ஏரிக்கு மேட்டூர் அணையிலிருந்து அவ்வப்போது தண்ணீர் திறந்து நிரப்பினாலும் சென்னை குடிநீர் தேவை யை சில மாதங்கள் கூட சமாளிக்க முடியாத நிலை உள்ளது.

திருவாரூரில் த.வெ.க.வினர் கைகலப்பு!

திருவாரூர், ஜூலை 26- திருவாரூரில் தவெகவினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது திருவாரூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. திருவாரூர் வடக்கு மாவட்ட தவெக செயலாளர் மதன். மாவட்ட இணை செயலாளர் ஆனந்தராஜ். இவர்கள் இருவருக்கும் பனிப்போர் இருந்து வருகிறது. இந்நிலையில் திருவாரூர் தைலம்மை திரையரங்கில் ஜனநாயகன் திரைப்படம் நேற்று வெளியானது. திரைப்படத்தை மதனின் சகோதரர் மனோஜ்(33), அவரது நண்பர் தமிழ் ஆகியோர் பார்த்தனர். திரைப்படம் முடிந்து இருவரும் திரையங்கின் வெளியே வந்தனர். அப்போது மாவட்ட இணை செயலாளர் ஆனந்தராஜ் தரப்பு சார்பில் விதைப்பந்து வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

அந்த நேரத்தில் மதன் தலைமையில் ஒரு மாதத்துக்கு முன் கட்சியில் இணைந்த புலிவலத்தை சேர்ந்த டாக்டர் கோபிநாத் திரைப்படத்தை பார்த்து விட்டு வெளியே வந்து தனது காரை எடுக்க முயன்றார்.

அப்போது விதைப் பந்து வழங்கும் இடத்தில் இருந்த ஒருவர் மீது கார் மோதியது.

இதை பார்த்த ஆனந்தராஜின் ஆதரவாளரான தவெக மாணவரணி அமைப்பாளர் பசுபதி(33) சம்பவ இடத்துக்கு வந்து ஏன் காரை வைத்து மோதினாய் என்று கோபிநாத்திடம் கேட்டார். இதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது அங்கிருந்த மனோஜ், தமிழ் ஆகியோர் சேர்ந்து பசுபதியை தாக்கினர்.

இதனால் வலி தாங்க முடியாமல் பசுபதி கீழே விழுந்தார். அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் உதவியுடன் பசுபதி மீட்கப்பட்டு சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கோவை மாநகர் மாவட்டம், ராமநாதபுரம் பகுதி, 63வது வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதிக் கழகப் பொறுப்பாளர் ப.பசுபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.நா. உதயாகுமார், மு.ம.ச.முருகன், வட்டக் கழக பொறுப்பாளர்கள் சண்முகசுந்தரம், செந்தில், குட்டி, கேபிள் முத்து, மாமன்ற உறுப்பினர் சாந்தி முருகன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.